சுருக்கம்

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் – தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் அவர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்காக ரூ.24,850/–க்கு கைப்பேசி (Cell Phone) வாங்கப்பட்டதற்கு பின்னேற்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.35 நாள் 8.4 .2010

படிக்கப்பட்டவை:

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சென்னை–26, கடிதம் ந.க.எண்.நிர்.2/9285/2007, நாள் 21.5.2008.

* * *

ஆணை:

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையச் செயலாளர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மாநிலத் தேர்தல் அலுவலர்கள் மற்றும் பிற அலுவலர்களை அவ்வப்போது தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையாளர் அவர்களுக்கு கைப்பேசி மிகவும் அத்தியாவசியமாகும் என்றும், எனவே, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையாளர் அவர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்காக ரூ.24,850/– (ரூபாய் இருபத்தி நான்காயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) விலையில் டேலிட்ரோனிக்ஸ் நிறுவனத்திலிருந்து நோக்கியா (Nokia N95) மாடலுடைய ஒரு கைப்பேசி (கைப்பேசிக்கான காப்புறுதி ஒரு வருடமும், உதிரி பாகங்களுக்கு ஆறு மாத காப்புறுதியும் கொண்ட உபகரணம் (Liquid Lock and Physical Damage Means No. Warranty) வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் இதற்கு பின்னேற்பு ஆணை வழங்குமாறும் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் கருத்துருவினை ஏற்று, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையாளர் அவர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்காக ரூ.24,850/–(ரூபாய் இருபத்து நான்காயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) விலையில் கைப்பேசி (Cell Phone) வாங்கப்பட்டதற்கு சிறப்பு நேர்வாகக் கருதி பின்னேற்பு வழங்கி அரசு ஆணை வெளியிடுகிறது.

த.பி.பா.

3. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.9897/RD/2010, நாள் 12.3.2010–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
செயலாளர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், எண்.208/2, ஜவஉறர்லால் நேரு சாலை,
அரும்பாக்கம், சென்னை–106.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9.
கருவூலம் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை–15.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/9.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
நகல்
நிதித் (ஊ.வ.) துறை, சென்னை–9.
பொதுத் (தொ.பே.) துறை, சென்னை–9.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.